(ஆ) கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.10,00,00,000/–ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

3. அறிவிப்பு—தொடர்ச்சி

(ஆ) சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு அருகே விளையாட்டுப் போட்டிகள் நடத்த ஏற்பாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடர் நடைபெறும் நாட்களில் மாலை நேரங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களது விருந்தினர்களின் பொழுதுபோக்கிற்காகவும், அவர்களின் தகவலுக்காகவும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் சிலம்பம், யோகா,

டேக்வோண்டோ, குத்துச்சண்டை, உஷூ ஆகிய விளையாட்டுகள் காட்சிப் போட்டிகளாக 5–5–2008, 6–5–2008, 8–5–2008, 12–5–2008 மற்றும் 13–5–2008 ஆகிய நாட்களில் மாலை 6–00 மணி முதல் 8–00 மணி வரை சட்டமன்ற உறுப்பினர்களின் குடியிருப்பு வளாகத்தில் B, C மற்றும் D தொகுப்புகளுக்குப் பின்புறம் அமைந்துள்ள சிறுவர்கள் விளையாட்டுத் திடல் அருகில் நடைபெறவுள்ளன. சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்விளையாட்டுப் போட்டிகளை உறுப்பினர்கள் அனைவரும் கண்டுகளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6–5–2008) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

54. 2006 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28 ஆம் நாள் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் மாற்றம் செய்து, யாதொரு வணிகர், பழைய அல்லது பயன்படுத்தப்பட்ட கண்ணாடி புட்டிகள் ஆகியவற்றின் கடைசிக் கொள்முதலின்போது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள காலம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு விலக்களித்தது குறித்தும்; மற்றும் கழிவுத்தாள் மற்றும் கழிவுக் காகித அட்டை ஆகியவற்றின் கடைசிக் கொள்முதலின்போது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள காலம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு விலக்களித்தது குறித்தும் வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 19–12–2007 ஆம் நாளிட்ட 198 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2). பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

55. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்